**கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புச் செயற்றிட்டம் - 2018**

கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புச் செயற்றிட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 செப்தெம்பர் 03 ஆந் திகதிய எஸ்எல்-பீ 90 ஆம் இலக்க துணைநிலைக் கடன் உடன்படிக்கையின் IV ஆவது உறுப்புரையின் 4.03(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த செயற்றிட்டமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை என அறியப்படும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கிக்கும் இடையே கைசாத்திட்ட 2007 மார்ச் 28 ஆந்திகதிய எஸ்எல்-பீ90 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்படுகின்றது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்றிட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்றிட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சும் தற்போதைய நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்றிட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. புதிய அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதன் மூலம் கொழும்பு நகரம் மற்றும் கொட்டியாவத்தை - முல்லேரியாப் பகுதியின் நீர் வழங்கலை புனரமைத்து தரமுயர்த்தல் மற்றும் மாளிகாகந்தையில் புதிய நீர்த்தேக்கம், எலி ஹவுஸ்சில் நீர் தேக்கம் நிர்மாணித்து கொட்டியாவத்தை மற்றும் முல்லேரியாவில் நீர் வழங்கல் முறைமையை முன்னேற்றுதல் மற்றும் கொழும்பு நகரத்தில் தெரிவு செய்யப்பட்ட தோட்டங்களில் வாடகை நீர் இணைப்பை வழங்கல் என்பனவே செயற்றிட்டத்தின் பிரதான குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 4,785 மில்லியனிற்குச் சமமான ஜ.ஜென் 5,359 மில்லியனானதுடன் அதில் ரூபா 3,549 மில்லியனிற்குச் சமமான ஜ.ஜென் 3,975 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்க வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி தொகை ரூபா 1,236 மில்லியனிற்குச் சமமான ஜ.ஜென் 1,384 மில்லியன் இலங்கை அரசாங்கம் நிதியளிக்க வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்றிட்டம் அதன் நடவடிக்கைகளை 2007 நவம்பர் 27 இல் தொடங்கியிருந்ததுடன் 2012 சனவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்றிட்ட காலம் 2017 யூன் 20 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்றிட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

---

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம்

ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| செற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,152 மில்லியனிற்கு சமமான ஜப்.ஜென் 3,138 மில்லியன் தொகையான கைதவிர்ப்புகள் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பதிவேடுகளின் பிரகாரம், செயற்திட்டத்திற்காக செய்யப்பட்ட கைதவிர்ப்புகள் தனித்தனியாக பதியப்பட முடியாதிருந்ததுடன் வேறு 03 நன்கொடையாளர் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்கான கைதவிர்ப்புக்களுடன் ஒன்று சேர்த்து அத்திகதியில் உள்ளவாறு ஜப்பான்.ஜென் 13,231 மில்லியன் கூட்டுத் தொகையான கைதவிர்ப்புகள் காட்டப்பட்டிருந்தது. | மீதிகள் இணக்கம் செய்யப்படவில்லை | எஸ்எல்பி-90 ஆம் இலக்க கடனிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தொகை ஜப்.ஜென் 13,231 மில்லியனாக இருந்ததுடன் அதில் இந்த செயற்திட்டத்திற்காக ஜப்.ஜென் 3,975 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆகவே, செயற்திட்டமானது ஜப்.ஜென் 3,138 மில்லியன் செலவழித்திருந்ததுடன் சேமிப்புகள் கடன் உடன்படிக்கையுடன் சம்பந்தப்பட்ட வேறு மூன்று செயற்திட்டங்களால் பயன்படுத்தப்பட்டிருந்தது. | மீதிகள் இணக்கம் செய்யப்பட வேண்டியதுடன் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

| நடவடிக்கை | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னெற்றம் | | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | எதிர்பாரக்கப்பட்டது | அடையப்பட்டது | | | |
| மாலிகாகந்த அலுவலக கட்டிட நிர்மாணம் | 2011 மே 31 | 2018 இல் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது ரூபா 18 மில்லியன் மேலதிக கிரயத்தில் | எதிர்பாராத விதமாக செயற்திட்ட கிரயம் அதிகரித்தது. | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. | இதன்படி நிதிகளின் பயன்பாடு செயற்திட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வேலைகளின் நோக்கெல்லையுடன் ஒத்திருக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கட்டிடத்தை நிர்மாணித்திருந்தது. | | | |
| ஹெட்டிகாவத்தை - முல்லேரியாவில் நீர் வழங்கலை தரமுயர்த்தல்<br>- அம்பத்தளை இறைக்கும் இல்ல நிர்மாணம்<br>- கோத்தட்டுவ நிலத்து நீர்தேக்கம் மற்றும் இறைக்கும் இல்ல நிர்மாணம் | -- | செய்யப்படவில்லை | செயற்திட்ட நோக்கங்கள் அடைப்படவில்லை. | -மேற்படி- | வீட்டுரிமையாளர்களிற்காக வசதிகளை வழங்கும் நோக்கில் செயற்திட்டத்தில் செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வேலைகளின் நோக்கெல்லையிற்கு கவனம் செலுத்த வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கலிலுள்ள தாமதம் காரணமாக செயற்திட்டத்தின் காலப்பகுதி 2017 யூன் 20 வரை இரண்டு தடவை நீடிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், மிகுதி நிர்மாண வேலைகளின் பூர்த்தியாக்கல் செலவினங்களை செய்வதற்கு 2015 யூன் 20 இல் கடன் முடிவுறுத்தல் செய்த பின்னர் ஒப்பந்தகாரரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்கு ரூபா 346.59 மில்லியன் தொகை மாற்றப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அவற்றிற்க வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடமிருந்தான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், ஆரம்ப கட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட செயற்திட்ட வேலைகளின் நோக்கெல்லையை கருத்திற்கொள்ளாமல் ஒப்பந்தகாரரால் நிர்மாண | செயற்திட்ட கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் நிதி முகாமைத்துவம் மீதான கட்டுப்பாடு நலிவாக உள்ளது. | செயற்திட்டமானது கைச்சாத்திட்ட திருத்திய ஒப்பந்தம் 2015 யூன் 20 எஸ்எல்பி-90 ஆம் இலக் கடன் காலாவதியானதால் மிகுதி வேலைகளிற்காக ஒப்பந்தகாருடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. சொல்லப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கைகள் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்ப முகவாண்மைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் உரிய அமைச்சின் ஒத்திசைவுடன் செயற்திட்டத்தால் | செயற்திட்ட நடவடிக்கைகளின் கண்காணிப்பிற்கான பொறிமுறை வீணாக்குதல் மற்றும் தவறான பயன்படுத்தலை தவிப்பதற்கு இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| வேலைகள் அமுலாக்கப்பட்டது. மேலும், கொடுப்பனவு அறிக்கையுடன் ஒப்பந்தகாரரால் செயற்திட்டத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய மாதாந்த வங்கிக் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | வெளிநாட்டு வளங்கள் திணைக்கள பணிப்பாளரின் அனுமதி பெறப்பட்டது. | |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| ஆரம்ப வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த அலுவலக கட்டிடம் கொலன்னாவ பிரதேச செயலாளரிடமிருந்து குத்தகை வாடகை அடிப்படையில் பெறப்பட்ட காணில் ரூபா 162.41 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடாமல் 2018 திசெம்பர் 31 வரை ரூபா 5.17 மில்லியன் கூட்டுத்தொகையான குத்தகை வாடகை செலுத்தப்பட்டது. மேலும், ஆரம்ப வெலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்தும் இன்னொரு அலுவலக கட்டிடம் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடாமல் 2009 இல் கொழும்பு மாநகர சபையிடமிருந்து குத்தகை வாடகை அடிப்படையில் பெறப்பட்ட காணியில் மாலிகாகந்தவில் ரூபா 18 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது ஆரம்பத்தில் ரூபா 151.50 மில்லியன் தொகை நில வாடகை செலுத்தியிருந்தது. உரிய கட்டிடம் 2015 இலிருந்து கொழும்பு மாநகர சபை உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்காக அனுமதிக்கப்பட்டிருந்தது. | பயனற்ற செலவினம் | ஒத்துக்கொள்ளப்பட்டது. செயற்திட்டமானது குத்தகை உடன்படிக்கையை செயல்படுத்துவதற்கு இறுதி கொடுப்பனவு செலுத்தப்பட்டது. கொலன்னாவ அலுவலக கட்டிடத்தின் நிர்மாணம் செயற்திட்டத்தின் ஆரம்ப வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத போதிலும் பின்னர் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாக கடனளிக்கும் முகவரின் ஒத்திசைவு பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. | கடனாக பெறப்பட்ட நிதிகளை வினைத்திறனாக பயன் படுத்தவதற்கு இயலக் கூடியவாறு ஆரம்ப கட்டத்தில் தேவைகளை இனங்காணப்பட வேண்டும். |

### 3.4 தீர்வு காணப்படாதிருந்த முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| வீதி சீர்படுத்தல் வேலைகளிற்காக 2013 இல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் இடப்பட்ட ரூபா 11.9 மில்லியன் பெறுமதியான மீளளிக்க வேண்டிய வைப்புக்களை மீளளிக்கவேண்டிய வைப்புக்களின் தகுதிக்காலம் காலாவதியான போதிலும் 2018 திசெம்பர் 31 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிதிகளை தவறாக பயன்படுத்தல் | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பச் சபை வீதி சீர்படுத்தல் வேலைகளிற்காக 2013 இல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் இடப்பட்ட ரூபா 11.9 மில்லியன் பெறுமதியான மீளளிக்க வேண்டிய வைப்புக்களை அறவிடும் நடைமுறை செயற்பாட்டில் உள்ளது. மூலப் பற்றுச்சீட்டு தவறவிடப்பட்டமையால் அறவீடு தாமதப்பட்டுள்ளது. | நிலுவைகளை அறவிடுவதற்கு முன்னரே நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| நிதி மற்றும் திட்டமில் அமைச்சின் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு நாளது வரையாக்கப்பட்ட வழியில் செயற்திட்டத்தால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை தவறாக பயன்படுத்துவதற்கும் செயற்திட்ட காலப்பகுதி இறுதியில் சொத்துக்களை கையளிப்பதில் பல பிரச்சனைகளிற்கு முகம் கொடுக்கும் சாத்தியம். | செயற்திட்டமானது நிலையான சொத்துப் பதிவெடுகளை பேணியிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டு இறுதி வரை பௌதீக மெய்மையாய்வை மேற்கொண்டிருந்தது. அதன் பின்னர், உரிய காலத்தில் நிலையான சொத்தினை நாளதுவரையாக்குவதில் தாமதமடைந்திருந்தது. தற்போது, சகல கிடைக்கக் | செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேட்டில் நாளதுவரை பதியப்பட வேண்டும். |

கூடிய சொத்துக்களும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பல்வேறு பிரிவுகளிற்கு கையளிக்கப்பட்டிருந்தது.